இந்த ஆண்டிலிருந்து ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. நாடகத் துறைக்கு ஒரு முக்கியத்துவம் தந்து மாணவர்கள் அதில் சிறப்பான பயிற்சி பெறுகின்ற ஒரு சிறப்புப் பள்ளி நம்முடைய ஸ்போர்ட்ஸ் ஸ்கூலைப் போல, டிராமா ஸ்கூல் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து, அதற்கு 'சிலபஸ்ஸும்' போடப்பட்டிருக்கிறது. அவர்கள் மற்ற மாண வர்கள் படிக்கின்ற பாடங்களை படிப்பார்கள். காலை, மாலை நேரங்களில் இந்த நாடகத்திலே சிறப்பான பயிற்சியை பெறு வார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நையாண்டி மேளத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தானே செய்வதில், கலை என்று செய்வதாலும் ஆட்சேபம் இல்லை. ஆனால அது ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்கள் செய்வதாலும், அதுவும் ஒரு குறிப் பிட்ட சாவு போன்ற காரியத்திற்கு மட்டும் செய்வதென்று வற்புறுத்தப்படுவதாலும், அப்படி வற்புறுத்தப்பட்ட போது வட ஆற்காடு மாவட்டத்தில், வரகூர் என்ற கிராமத்தில் அந்த தொழில் செய்த பெரியவர்கள் இறந்துவிட்டதால் படித்த பிள்ளை களை கட்டாயப் படுத்தி செய்ய வேண்டுமென்ற தகவல் அரசிற்கு வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன். அது குறித்து அரசு வருங் காலத்திலாவது தங்கள் இஷ்டப்படி ஒரு குறிப்பிட்ட சமு தாயம் செய்ய முடியாது என்பதால், கலை என்ற பெயரால் ஆபத்து வராமல் அரசு கவனித்து அவர்களுக்கு உதவி செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் இஷ்டப்படி கலை வளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் பொறுத்த கேள்விகளுக்குத்தான் பதில் அளிக்க இயலும். மற்றபடி மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது சட்டம், ஒழுங்கு சம்பந்தப் பட்டது என்றால் வேறு தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்.

ALONE TRIUMPH

நெல்லை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி.

*வினா எண். 511—திரு. ஆர். கே. பெருமாள் , திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசுக்கு எண்ணம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் ஆரம்பிக்கபபடும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலியில் ஆரம்பிக்கலாம் என்று கருதப்படு கிறது.

1981 மார்ச் 27]

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே பிற்பட்ட பகுதியான விளாத்திகுளம் பகுதியிலே கல்லூரியோ, தொழிற் பயிற்சிக் கல்லூரியோ இல்லாத காரணத்தால், மாணவர்கள் கோவில்பட்டி, தூத்துக்குடி போன்ற இடங்களுக்குச் சென்று படிக்கின்ற சூழ்நிலை இருப்பதால் விளாத்திகுளத்தில் ஒரு தொழிற் பயிற்சி கல்லூரி அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த உத்தேசம் இல்லை.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரி அமைப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எந்த இடத்தில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது? எப்போதிலிருந்து இது செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் ஆரம்பிக்கலாம் என்ற கருத்திலே இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். பரிசீலனை முடிந்த பிறகு ஆரம்பிக்கப்படும்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையில் பல கல்லூரிகள் இருக்கின்றன. அதற்குப் பக்கத்தில் காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே பாளையங்கோட்டையில் ஆரம்பிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, காலியிடங்கள் இருக்கிற இடத்தில் எல்லாம் கல்லூரிகளை ஆரம்பித்துக் கொண்டிருக்க முடியாது. திருநெல்வேலியில் ஒரு நல்ல இடமாகப் பார்த்து பிறகு திருநெல்வேலியிலா, மேலப் பாளையத்திலா அல்லது தச்சநல்லூரிலா என்பது முடிவு செய்யப்படும்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டை என்று சொன்னார்கள். இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ? எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். முடிவு எடுக்கப்பட்ட பிறகு விவரம் சொல்கிறேன்,